www.tamilarangam.net

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

Date 06.05.1994

# கொலைவெறி புலிகளால் தமிழின அழிப்பு ஐரோப்பாவிலும் தொடங்கி விட்டது

மேமாதம் முதலாம் திகதி திரு.சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள் பாரிசுக்கு அண்மையில் உள்ள அவரது வீட்டில் வைத்து மதியம் 1.30மணியளவில் தமிழின அழிப்பு புலிகள் உறுப்பினர் இருவரால் மனைவி, குழந்தை முன்னிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சபாலிங்கம் அவர்கள் தனது மாணவ பருவத்தில் இருந்தே தமிழ் தேசிய விடுதலைப்போராட்டத்தில் தீவிரமாகத் தம்மை இணைத்துக் கொண்டவர்களில் ஒருவர். இக்காலகட்டத்தில் தபால் தந்தி அமைச்சராக இருந்த செல்லையா குமாரசூரியரின் தீவுப்பகுதி விஜயத்தின்போது பண்ணைப்பாலத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தின் காரணமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர். இக்கால கட்டத்தில் கண்டி போகம்பரை சிறையிலிருந்து தப்பிச் செல்லும் முயற்சியில் பலத்த காயத்திற்குட்பட்டதுடன் மீண்டும் நீண்டகாலம் சிறையில் இருந்து நோய்வாய்ப்பட்ட நிலையில் விடுதலையானார்.

பின்னர் 1979ல் பிரான்ஸ் நாட்டுக்கு நோய்வாய்ப்பட்ட நிலையில் வந்த இவர், சொந்த நாட்டில் பின்னணி உள்ளதாக கூறி வெளிநாட்டில் அரசியல் பிழைப்பு நடாத்தும் சில வெற்றுவேட்டுக்கள் போலன்றி மிகவும் அமைதியான முறையில் தமிழ்மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தின் பாதகமான அம்சங்களை வெளிப் படுத்துவதன் மூலம் தேசிய விடுதலைப் போராட்டம் சரியான பாதையில் செல்ல வேண்டும் என்பதில் முழுமுயற்சி எடுத்தவர். இதற்கு உதாரணமாக சமீபத்தில் சுவிஸ்பேர்ன் நகரில் நடைபெற்ற இலக்கிய சந்திப்பின்போது தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தில் நடந்த உட்கொலைகள் சம்பந்தமாக வெளியான 'புதிய தோர் உலகம்' புத்தகத்தை ஏழு வருடங்களின் பின்னர் மீண்டும் மறுபிரசுரம் செய்து வெளியிட்டவர்.

எந்த ஒரு இயக்கமோ அல்லது மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கிறோம் என வாய்கிழிய கத்தும் எவருமே சாதிக்காத அளவில் தமிழ் மக்களின் வரலாறு சம்பந்தமான புத்தகங்களை வெளிக்கொண்டு வருவதிலும் புலிகள் உட்பட ஏனைய இயக்கங்களின் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக யாழ் பல்கலைக் கழக ஆசிரியர்களின் வெளியீட்டை பிரான்ஸ் மொழியிலும் மொழிபெயர்த்து விட்டவர். தமிழ் தேசிய விடுதலைப்போராட்டத்தின் இன்றுவரையிலான வரலாற்றை முழுமையாக வெளிக் கொணரும் செயலில் சமீப காலத்தில் மிக தீவிரமாக ஈடுபட்டவர்.

இவரது இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் குறிப்பாக, பிரான்ஸ் தமிழ்மக்களை தமது கட்டுப் பாட்டில் வைத்திருப்பதாக கனவு கண்டு கொண்டிருக்கும் புலிகளுக்கும் புலிகளின் சர்வதேச தொடர்பாளர் லோறன்ஸ் திலகர் அவர்களுக்கும் பெரும் சவாலாக அமைந்திருந்தது. இவரை கொலை செய்வதன் மூலம் தமிழ் மக்களின் தேசிய வரலாற்றையே கொலை செய்ய புலிகள் முயற்சி செய்துள்ளார்கள்.

ரஜீவ் காந்தியை கொலை செய்ததன் மூலம் இந்தியாவில் உள்ள தமிழ் மக்களை சொல்ல முடியாத இன்னலுக்குள்ளாக்கியது போல் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களை பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி மேலும் கெடுபிடிகளில் மாட்டிவிடும் செயலாகவே புலிகளின் கொலைகள் அமைகின்றன. தமிழ் இன அழிப்புப் புலிகள் ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்களுக்கெதிராக வன்முறைகளில் ஈடுபடுவோர்கள் என ஜேர்மன் புலனாய் வுத்துறையினர் தமது மத்திய அரசுக்கு எச்சரிக்கை செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[மறுபக்கம் பார்க்க]

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் திரு.சபாலிங்கத்தின் கொலையை வன்மையாகக் கண்டிப்பதுடன் புலிகள் இக்கொலைகளை நிறுத்தும்படி எச்சரிக்கின்றோம். புலிகளால் மேற்படி வெறித்தனமான கொலைகள் தொடருமெனில் புலிகளின் முன்னணியில் உள்ளவர்கள் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டிவரும் என்பதை கூறிவைக்க விரும் புகிறோம்.

திரு.சபாலிங்கத்தை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தவருக்கும், அரசியல் நண்பர்களுக்கும் தோழர் களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவருக்கு அஞ்சலிக் கூட்டத்தையோ கண்டனத்தையோ கண்டன பிரசுரத்தையோ மட்டும் செய்யாமல் அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்து முடிப்பதே அவருக்கு செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும் என்பதை தெரியப்படுத்துவதுடன், அத் தகைய பணியில் ஈடுபடுவோருக்கு எம்மாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் ஆதரவுகளையும் வழங் குவோம் என உறுதியளிக்கின்றோம்.

எந்த இனத்தில் இவர்களைச் சேர்க்க
மிருகமா? பிசாசா?
குருதிப்புலைவெறி ஓநாய்கூட்டமா?
இருதயம் இழந்த அரக்கர் குலமா?
மக்களே அறிக!
நேற்றைய பகலில் எமது சபாலிங்கத்தை கொன்றனர் கொடியவர்
இவர்கள் யார்?
எந்த இனத்தில் இவர்களைச் சேர்க்க
புலிகளாம் புலிகள்!!
மானுட நேயமும் மக்கள் ஆதரவும்
மக்களை நம்பும் விடுதலை இயக்கம் என அறிவிப்பும்
வெற்று வார்த்தைகள் நீர்மேல் எழுத்து
மாரீசவேடம் மக்களை ஏய்க்கும் பாசாங்கு போலிகள்!!
குருதி விழுங்கும் காகிதப்புலிகள்
இரத்தவெறியும் நிணமும் மணக்கும் கொலைவெறிப்புலிகள்
மக்களே அறிக!! இவர்களை அறிக!!
வேஷங்களை உதறு! வெளியே வா
உண்மையின் முகத்தை வெளியில் தரிசி
ஆயுதம் ஏந்திய அரக்கத்தனத்தை அசுரர் படையை மக்கள் வெல்வர்

16 Haiy Road
Colombo -4
Srilanka

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்